



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் நசரத்பேட்டையில் தமிழ்நாடு தலைகுனியாது இளைஞர்கள் மாணவர்கள் தன்னார்வ அமைப்புகள் தொழிற்சங்க தொழில் முனைவர் கல்வியாளர்கள் விவசாய சங்கங்கள் வியாபாரி சங்கங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சமூக நல்லிணக்க பிரதிநிதிகள் ஆகியோர் எதிர்பார்ப்பு கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள். இந்நிகழ்ச்சியில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ் ஒன்றிய கழகச் செயலாளர் ப. ச.கமலேஷ் உள்பட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர் ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## திருவொற்றியூர் நெடுஞ்சாலை ‘வள்ளலார் சாலை’ என அறிவிப்பு!

# முதல்வருக்கு - ஆன்மிக அன்பர்களும், பொதுமக்களும் பாராட்டு நன்றி!

### சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தினருடன் வை.ம.அருள்தாசன் இனிப்பு வழங்கினார்!

சென்னை,பிப்.3–

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல். ஏ வழிகாட்டுதலில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் அவர்கள் திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் நெடுஞ்சாலை என பெயர் சூட்டியதற்கு கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வள்ளலார் நெறியாளர்களோடும், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க நிர்வாகிகளோடும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி முதல்வருக்கு நன்றி தெரிவித்து மகிழ்ச்சியாக கொண்டாடினார்.

வடலூர் ராமலிங்க அடிகளார் எனப்படும் வள்ளலார் அவர்களின் 202வது பிறந்தநாளை (தனிப்பெருங்கருணை நாள்) முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.2.2026 அன்று ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி, சென்னையில் உள்ள முக்கிய சாலையான திருவொற்றியூர் நெடுஞ்சாலை, இனி ”வள்ளலார் சாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்படுவதாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பு, தமிழ் சமூகம் மற்றும் ஆன்மீக அன்பர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பசிப்பிணி போக்கிய வள்ளலாரின் சேவையைப் போற்றும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக நீதி, சாதி, மத பேதமற்ற ”சமரச சுத்த சன்மார்க்கத்தை உலகிற்குச் சொன்ன வள்ளலாரின் பெயரைச் சூட்டுவது, தமிழக அரசின் கொள்கை முடிவுகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

தமிழ் அறிஞர்கள், சன்மார்க்க சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் முதலமைச்சரின் இந்த அறிவிப்புக்கு தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து வருகின்றனர்.

வள்ளலாரின் கொள்கைகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஒரு மைல்கல்லாக இந்த அறிவிப்பு அமைந்துள்ளது. சென்னையின் ஒரு முக்கிய அடையாளத்திற்குத் தமிழின் உயரிய ஆன்மீகப் பெரியவரின் பெயரைச் சூட்டிய முதலமைச்சரின் செயல் ”காலத்தால் அழியாத வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு எனப் பலராலும் புகழப்படுகிறது.



உலகம் உங்கள் கையில் – மாணவர்களுக்கு மடிக்கணினி திட்டத்தின் மூலம், தமிழ்நாடு அரசின் விலையில்லா மடிக்கணினிகளை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி வழங்கிச் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மருத்துவமனை முதல்வர் டாக்டர். அரவிந்த், துணை முதல்வர் திருமதி. சத்திய லட்சுமி, மருத்துவக் கண்காணிப்பாளர் ஜோதி குமார், RMO திருமதி. விஜயலட்சுமி, இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், மாமன்ற உறுப்பினர் திருமதி. கீதாசுரேஷ், வட்டச் செயலாளர்கள் எஸ்.புகழேந்தி மற்றும் பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் ஊராட்சியில் செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் இணைந்து பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்கமாறு தலைமை செயற்குழு உறுப்பினர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் ஜெ.முர்த்தி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, வி.பி.ரவிக்குமார், க.சம்பத், என்.கிருஷ்ணமூர்த்தி, ஏ.சீனிவாசன், எஸ்.சுமன், கார்த்திக், கே.வி.நாகராஜ், ப.பரத்குமார், அறிவழகன், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

# 125வது வட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

### வட்டச் செயலாளர் அ.தவநேசன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.3–

பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் அ.தவநேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:–

125–வது வட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக பொறுப்பாளர்கள் கவனத்திற்கு.

நமது மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி வேண்டுகோளுக்கிணங்க இன்று (3.2.2026 செவ்வாய்க் கிழமை) காலை 7 மணியளவில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு கழகத்தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் சேப்பாக்கம் பகுதியில் இருந்து அமைதி ஊர்வலம் மற்றும் பஜார் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு காலை 10 மணியளவில் வட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்தல் மற்றும் வட்ட கழக அலுவலகத்தில் பேரறிஞர் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்த உள்ளோம்.

எனவே மாமன்ற உறுப்பினர், கழக நிர்வாகிகள், அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு 125–வது வட்ட கழக செயலாளர் மயிலை கிழக்கு பகுதி அ.தவநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணி மற்றும் வெற்றி மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வு சங்கம் சார்பில் அதன் மாவட்ட சங்க தலைவர் சி.முருகன் ஏற்பாட்டில் தி.மு.க.மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் ஏ.வ.வே. கம்பன்,பெ.சு.தி.சரவணன் எம்எல்ஏ,திமுக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர், மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர் ரெ. தங்கம் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன வீல் சேர்கள் உள்ளிட்ட நலத்திட்டங்களை வழங்கினார்கள். உடன் ஒன்றிய செயலாளர்கள் செ. சிவக்குமார், சுப்பிரமணியன் உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.

